# அறிவியல் ஒளி

## ARIVIYAL OLI

செப்டம்பர் 2009





சுடர்: 3

ஒளி: 10



விலை: ரூ 7.00

ஆண்டுச் சந்தா: ரூ 80

# கொலம்பசின் முட்டை

முனைவர் **து.உத்ரா**,
துறைத் தலைவி, இயற்பியல் துறை
து.கோ. வைணவக்கல்லூரி,
அரும்பாக்கம், சென்னை-106

(படம் அட்டையில்)

"ஔவியம் பேசேல்" - ஆத்திச் சூடி

கிறிஸ்டோபர் கொலம்பஸ் கிழக்காசியாவிற்குக் கடல்வழிப்பாதையைக் கண்டுபிடிக்க 1492ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3ஆம் நாள் தன் பயணத்தைத் தொடங்கினார். பற்பல இடையூறுகளைச் சந்தித்தார். தன்னுடைய கணிப்பில் ஏற்பட்ட தவறுகளால், ஆசியாவை அடைவதற்குப் பதில் மேற்கிந்தியத் தீவுகளைச் சென்றடைந்தார். புதிய உலகத்தைக் கண்டுபிடித்த அவருக்கு ஐரோப்பா திரும்பியதும் மிகப்பெரும் வரவேற்பு கிடைத்தது. மக்கள் அவரைக் கொண்டாடினர். ஸ்பெயின் நாட்டைச் சார்ந்தவர் அல்ல என்றாலும், ஸ்பெயின் அரசின் நிதி உதவியால் கொலம்பஸ் தன் கடல்பயணத்தை மேற்கொண்டார். கொலம்பசின் இந்தக் கண்டுபிடிப்பை ஸ்பெயின் அரசர் மிகவும் பாராட்டினார். அந்நாட்டின் தலைமைப் பாதிரியார் இதனைக் கொண்டாடும் விதத்தில் ஒரு மிகப் பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஸ்பெயின் நாட்டின் சிறந்த வணிகர்கள், படித்த அறிஞர்கள், பெரிய பதவிவகிப்பவர்கள், செல்வந்தர்கள், பெரும் நில உரிமையாளர்கள் என்று பல்வேறு தரப்பினரும் அந்த விருந்திற்கு அழைக்கப்பட்டார்கள். வந்திருந்த அனைவரும் கொலம்பசின் சாதனையைப் புகழ்ந்தனர். இதனால் அரசாங்கத்திற்கு வரப்போகும் ஆட்சி விரிவாக்கம், தொழில் விரிவாக்கம் மற்றும் வணிகர்கள் பலரும் பெறக்கூடிய நன்மைகள் பற்றிக் கலந்துரையாடினார்கள்.

கொலம்பசின் மேல் பொறாமை கொண்ட ஒரு சிலரும் இந்த விருந்தில் கலந்துகொண்டிருந்தார்கள். அவர் அடைந்த புகழையும், அரசாங்கத்தில் அவருக்குக் கிடைத்த அங்கீகாரத்தையும் பொறாமைக் கும்பலால் தாங்கமுடியவில்லை. அவரை இழிவுபடுத்தத் தக்க சமயம் பார்த்துக் காத்திருந்தார்கள். "எங்கள் ஸ்பெயின் நாடு மிகச் சிறந்த அறிவாளிகளையும், அறிஞர்களையும் உடையது. எங்கள் அரசர் செய்த பண உதவியினாலேயே, கடல் பயணம் புறப்பட்டு மேற்கிந்தியத் தீவுகளை அடைந்தீர்கள். அதனால் மிகவும் பெருமை கொள்ளாதீர்கள். நீங்கள் ஒருவேளை மேற்கிந்தியத் தீவுகளைக் கண்டுபிடிக்கவில்லை என்றாலும்

எங்கள் ஸ்பெயின் நாடு ஒன்றும் குறைந்து போயிருக்காது", என்று நெருப்பான வார்த்தைகளை வீசினர். ஆனால் வெற்றியாளர்கள் என்றும் பதட்டப்படுவதில்லை. இதனை முழுவதுமாய் அறிந்திருந்த கொலம்பஸ் அங்கிருந்த பணியாளரை, ஒரு முட்டையை எடுத்துவருமாறு ஏவினார். அச்சமயம், விருந்தில் ஒரு சொற்போரையும், குழப்பத்தையும் எதிர்பார்த்த அந்தப் பொறாமைக் கும்பல், கொலம்பசின் இச்செய்கை புரியாமல் விழித்தது.

முட்டையைக் கையில் வாங்கிய கொலம்பஸ் அவையோரை நோக்கி, "இந்த முட்டையை என்னால் நேராக நிற்கவைக்க முடியும். உங்களில் யாராவது இதை அவ்வாறு செய்ய முடியுமா?" என்று வினவினார். விருந்தினர் ஒவ்வொருவரும் அந்த முட்டையை நேராக நிறுத்தப் பார்த்தார்கள். யாராலும் முடியவில்லை. "உங்களில் யாராலும் முடியவில்லையா?" என்று கொலம்பஸ் கேட்டார். "ஆமாம்" என்று விருந்தினர் தோல்வியை ஒப்புக் கொண்டனர். அதன்பின், "நான் இந்த முட்டையை இப்போது நிற்கவைத்துக் காண்பிக்கிறேன். அதனைப் பார்த்தபின், இது என்ன பெரிய வேலை, எங்களாலும் இதே போல் செய்யமுடியுமே என்று சொல்லக்கூடாது" என்று கொலம்பஸ் கூறினார்.

கொலம்பஸ் அந்த முட்டையைக் கையில் எடுத்தார். மேசை மேல் அதன் ஓர் முனையை இலேசாகத் தட்டிச் சிறிது உடைத்தார். உருண்டு கொண்டிருந்த அந்த முட்டை, முனை உடைந்ததால், நிற்கவைத்ததும் நின்றது. இதனைப்பார்த்தவர்கள் கோபம் கொண்டார்கள். "எங்களுக்கும் இதுபோல் முட்டையை நிற்கவைக்கத் தெரியும். நீயென்ன சாதித்துவிட்டாய்" என்று சீறினார்கள். கொலம்பஸ் அவர்களோ நிதானமாக அவையோரிடம், "உங்களுக்குத் தெரியும் என்றால், நீங்கள் முதலிலேயே முயன்றிருக்கலாமே. பின்னால் பேசி என்ன பயன்? நான் கடல்பயணம் மேற்கொள்ளுமுன், கடல்வழி கண்டுபிடிப்பது முடியாது. அரசர் பணஉதவிசெய்வது வீண் என்று தடுத்தீர்கள். ஆனால், இன்றோ என்னுடைய வெற்றியைப் பார்த்துப் பொறாமை கொண்டுள்ளீர்கள். இது ஒன்றும் பெரிய காரியம் அல்ல என்கிறீர்கள். உங்களால் கடல்வழி கண்டுபிடிக்க முடியும் என்றால், நீங்கள் அதனைச் செய்திருக்கலாமே! சிந்தியுங்கள்! அறிஞர்களான நீங்கள் இவ்வாறு பேசுவது சரியா?" என்று கூறி அமர்ந்தார். அதைக் கேட்டவர்கள் தவறை உணர்ந்து மனம் மாறினார்கள். கொலம்பஸ் அவர்களுக்கு உரிய புகழ் கிடைப்பதில் பிறகு அவர்கள் குறுக்கிடவில்லை. கொலம்பஸ் தன் அறிவாலும், பொறுமையாலும், பொறாமையை வென்றார்.

---

(Stories from Science, Part 4 - by A. Suteliffe and A.P.D. Sutcliffe, Cambridge University Press என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டது)